# மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2024

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

10 - ஆம் வகுப்பு **தமிழ்**

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

**சரியான விடையளி :-** 15 X 1 = 15

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ............... .
அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்
2. 'பாடுதமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல் இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
3. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
4. உனதருளே பார்ப்பன் அடியேனே - யாரிடம் யார் கூறியது? அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்
ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார் இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
5. "இங்கு நகரப்பேருந்து நிற்குமா"? என்று வழிப்போக்கர் கேட்பது ........... வினா. "அதோ அங்கு நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ........... விடை. அ) ஐயவினா, வினா எதிர்வினாதல்
ஆ) அறிவினா மறைவிடை இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல்வினா, இனமொழி விடை
6. 'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கியவர்
அ) பாரதியார் ஆ) கம்பர் இ) செய்குதம்பிப் பாவலர் ஈ) பரஞ்சோதி முனிவர்
7. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் ........... .
அ) திரு. பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ.நேசமணி இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந.முத்துசாமி
8. மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டு குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
9. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது? அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
10. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடகூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்
இ) கரகாட்டத்தின் வெவ்வேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறுபெயர்கள் யாவை?
11. 'ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்' - என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
அ) காடு ஆ) நாடு இ) வீடு ஈ) தோடு

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

*வண்ணமும் சுண்ணமும் தண் நறுஞ் சாந்தமும்*
*பூவும் புகையும் மேவிய விரையும்*
*பகர்வனர் திரிதரு நகர வீதியும்*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது? அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) காலக்கணிதம் ஈ) புறநானூறு
13. 'வண்ணமும் சுண்ணமும்' என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) எண்ணும்மை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) வினைத்தொகை
14. 'காருகர்' என்பதன் பொருள் அ) ஓவியர் ஆ) ஆசிரியர் இ) நெய்பவர் ஈ) மருத்துவர்
15. இப்பாடலின் ஆசிரியர் அ) கம்பர் ஆ) பாரதியார் இ) கண்ணதாசன் ஈ) இளங்கோவடிகள்

## பகுதி - II பிரிவு - I

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும் :-** 4 X 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க. அ) சம்பாவில் அறுபது உள் வகைகள் உண்டு.
ஆ) ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர்.
17. 'காய் மணியாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' - உவமை உணர்த்தும் கருத்து யாது?
18. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி குறிப்பிடுக.
19. ஆற்றுப்படை என்றால் என்ன?
20. வசன கவிதை - குறிப்பு வரைக.
21. உலகு - என முடியும் குறளை எழுதுக.

## பிரிவு - II

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் :-** 5 X 2 = 10

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை எழுதுக. அ) கீரி பாம்பு ஆ) முத்துப்பல்
23. 'அமர்ந்தான்' பகுபத உறுப்பிலக்கணம் தருக.
24. இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. அ) சிறு - சீறு ஆ) விடு - வீடு
25. பழமொழிகளை நிறைவு செய்க. அ) ஒரு பானை ............ ஆ) உப்பிட்ட வரை ................. .
26. கலைச்சொல் தருக. அ) Casmic rays - ஆ) Intellectual -
27. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.
28. தொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.
அ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார். *(கலவைச் சொற்றொடராக மாற்றுக)*
ஆ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. *(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)*

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**பகுதி III பிரிவு - 1**

www.Padasalai.Net குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் :- www.Trb Tnpsc.com 2 X 3

உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப்பார்க்க இயலாதக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?

ஆ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாக திகழ்கின்றன?

31. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும் :-** 2 X 3 = 6

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

34. 'மாற்றம்' எனத்தொடங்கும் காலக்கணிதப்பாடலை எழுதுக. *(அல்லது)*

'சிறுதாம்பு' எனத்தொடங்கும் முல்லைப்பாட்டை எழுதுக.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் :-** 2 X 3 = 6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36. பண் என்னாம் பாடற்கியை பின்றேல் கண் என்னாம்

கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளை அலகிடுக.

37. கவிஞர்தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை விளக்குக.

**பகுதி - IV**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :-** 5 X 5 = 25


38. அ) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக. (அல்லது)

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) மென்திறன் பேசியால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்து உன் சகோதரிக்கு மடல் ஒன்று எழுதுக. **(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு விலை கூடுதலாகவும், தரமற்றதாகவும் இருந்தது குறித்து உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு புகார் விண்ணப்பம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கதவு எண் - 23, பாரதி தெரு, கிருஷ்ணகிரியில் வசித்து வரும் கண்ணன் மகள் புனிதா, கிருஷ்ணகிரி கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேரவிரும்புகிறார். தேர்வர் தன்னை புனிதாவாக கருதி உரிய படிவத்தை நிரப்புக.

42. அ) நீங்கள் பள்ளியிலும், வீட்டிலும் நடந்துக்கொள்ளும் விதத்தை பட்டியலிடு. (அல்லது)

ஆ) மொழி பெயர்க்க.

The golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twintting their morning melodies in perecussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows every where and makes every thing pleasant.

**பகுதி - V**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3 x 8 = 24

43. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. *(அல்லது)* ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. *(அல்லது)* ஆ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

**மகளிர் நாள்விழா**

இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள் : 08.03.2019

*கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை மாணவத் தலைவரின் நன்றியுரை.*

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை - கொரோனா பெருந்தொற்று - தடுப்பு நடவடிக்கைகள் - விழிப்புணர்வுச் செயல்பாடுகள் - நமது கடமைகள் - முடிவுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை - பொருட்காட்சி அமைவிடம் - நுழைவுக் கட்டணம் - பலவித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - பல்துறை அங்காடிகள் - பெற்ற உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com